# சில வரிச் செய்திகள்!

### கிருஷ்ணகிரி பட்டாசு விபத்து:


## பலி எண்ணிக்கை 9 ஆக உயர்வு!

*கிருஷ்ணகிரி, ஜூலை 30*

கிருஷ்ணகிரி பட்டாசு விபத்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டம் பழைய பேட்டையில் தனியாருக்கு சொந்தமான பட்டாசு குடோனில் நேற்று பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. பயங்கர சத்தத்துடன் குடோனில் இருந்த பட்டாசுகள் வெடித்து சிதறின. பட்டாசு குடோன் குடியிருப்பு நிறைந்த பகுதியில் அமைந்திருந்ததால் அருகில் உள்ள வீடுகளும் இடிந்து தரைமட்டமாகின. விபத்து குறித்து தகவலறிந்த போலீசார், தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விபத்தில் ஏற்கனவே 8 பேர் உயிரிழந்த நிலையில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. விபத்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த 9 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## சியாட்டில் நகர சமூக விழாவில் துப்பாக்கிச்சூடு: 5 பேர் பலி!

*வாஷிங்டன், ஜூலை 30*



அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ளது சியாட்டில் நகரம். அங்குள்ள ரெய்னர் பீச் பகுதியில் உள்ள 'சேப்வே' கடையில் சியாட்டில் சமூக பாதுகாப்பு தொடர்பான ஒரு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இலவச உணவு, இசை என இந்நிகழ்ச்சியில் மக்களை ஒன்றிணைக்கும் பல அம்சங்கள் இருப்பதால், மக்கள் பெருமளவில் உற்சாகமாக பங்கேற்பது வழக்கம். நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, துப்பாக்கி ஏந்திய ஒருவன் திடீரென அங்கு கூடியிருந்த மக்களை நோக்கி சரமாரியாக சுட்டான். இதில் 5 பேர் கொல்லப்பட்டனர். பலியானவர்களில் 4 ஆண்களும் 1 பெண்ணும் அடங்குவர். 2 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு ஹார்பர்வியூ மருத்துவ மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

## ஆகஸ்ட் 5 முதல் மேட்டுப்பாளையம் - உதகை இடையே சிறப்பு ரெயில்!

*நீலகிரி, ஜூலை 30*

மேட்டுப்பாளையம் உதகை இடையே மலை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த மலை ரெயிலில் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் பயணம் செய்து மலைப்பகுதியில் உள்ள இயற்கை எழில் காட்சிகளை கண்டு ரசித்து வருகின்றனர். இந்த நிலையில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக மேட்டுப்பாளையம் உதகை இடையே ஆகஸ்ட் 5 முதல் 27 ஆம் தேதி வரை வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

## கேரளாவில் திடீரென தீ பிடித்து எரிந்த அரசு பேருந்து! பயணிகள் காயமின்றி தப்பினர்!

*திருவனந்தபுரம், ஜூலை 30*

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்து திடீரென தீப் பிடித்து எரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அட்டிங்கல்திருவனந்தபுரம் வழித்தடத்தில் இயக்கப்படும் அரசு பேருந்து செம்பகமங்கலம் அருகே வந்தபோது இன்ஜின் பகுதியில் புகை வெளிவந்தது. இதை கவனித்த ஓட்டுநர் உடனே பேருந்தை நிறுத்தி பயணிகளை வெளியேற்றினார்.



சில நிமிடங்களில் பேருந்தில் திடீரென தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இந்நிலையில் தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். பேருந்து ஓட்டுநரின் சாமர்த்தியத்தால் பயணிகள் எந்தவித காயமுமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சீனாவை எதிர்கொள்ள தைவானுக்கு அமெரிக்கா ரூ.3 ஆயிரம் கோடி மதிப்பில் ராணுவ உதவி!

*வாஷிங்டன், ஜூலை 30*

கிழக்காசிய ஜனநாயக நாடான தைவானை, சீனா தனது தேசத்தின் ஒரு பகுதியாக அறிவித்தது. ஆனால், தைவான் இதனை ஏற்க மறுத்து வருகிறது. தேவைப்பட்டால் ராணுவ ஆக்ரமிப்பு மூலம் தைவானை கைப்பற்ற போவதாகவும் சீனா கூறி வருகிறது.

கடந்த ஆண்டு, சீன இராணுவம் தைவானை சுற்றியுள்ள பகுதிகளில் 2 பெரிய ராணுவ பயிற்சிகளை நடத்தியது. இந்த பயிற்சிகளில் தைவான் தீவின் முற்றுகையும் நடைபெற்றது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கிடையே பதட்டம் நிலவி வருகிறது.

இந்நிலையில் சீனாவிலிருந்து வரக்கூடிய தாக்குதல்களை எதிர்கொள்ளவும், தற்காப்பு திறனை மேம்படுத்தி கொள்ளவும், தைவானுக்கு அமெரிக்கா சுமார் ரூ.2800 கோடி ($345 மில்லியன்) மதிப்பிலான ராணுவ உதவியை வழங்க போகிறது.

---

### அதிகார பேராசையால்

# பெண்களின் கவுரவத்துடன் பா.ஜ. விளையாடுகிறது!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 30- மணிப்பூரில் கடந்த மே 4ம் தேதி இரண்டு பெண்களை ஒரு கும்பல் நிர்வாணமாக அழைத்து சென்றது, பா.ஜ. எம்.பி. பிரிஜ்பூஷன் சரண் சிங்,மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவம், பில்கிஸ் பானு கூட்டு பலாத்கார வழக்கு குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்தது தொடர்பான செய்திகள் தொடர்பான வீடியோக்களை இணைத்து ராகுல்காந்தி தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், பெண்களுக்கு உரிய மரியாதை அளிக்காத எந்த நாடும் முன்னேற்றம்



அடையாது. அதிகார பேராசையால், பெண்களின் மதிப்பு மற்றும் நாட்டின் சுயமரியாதை ஆகியவற்றுடன் பா.ஜ. விளையாடுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

**ஏழை, பணக்காரன் இடைவெளி அதிகரித்துவிட்டது**

ஜூலை 20 அன்று காய்கறி விற்பனையாளர் ஒருவர், காய்கறிகளின் விலையேற்றத்தால் தனது துயரங்களைச் சொல்லும் வீடியோவை ராகுல் வெளியிட்டு,' நாடு இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒருபுறம், ஆளும் ஆட்சியால் பாதுகாக்கப்படும் சக்தி வாய்ந்தவர்கள் உள்ளனர். மறுபுறம் பொதுவான இந்தியர்கள் உள்ளனர். அவர்களுக்கு காய்கறிகள் போன்ற அடிப்படை விஷயங்கள் கூட கிடைக்காமல் போகிறது. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே விரிவடைந்து வரும் இந்த இடைவெளியை நாம் குறைக்க வேண்டும். இந்த கண்ணீரை துடைக்க வேண்டும்' என்று டிவிட் செய்துள்ளார்.





செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முட்டுக்காடு படகு இல்லத்தில் தனியார் நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதியின் கீழ் ரூ.46.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் சுகாதார வளாகம், கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பு, பிளாஸ்டிக் பாட்டில்களை தூளாக்கும் இயந்திரம், காற்றில் இருந்து குடிதண்ணீர் தயாரிக்கும் இயந்திரம், சிறுவர் பூங்கா ஆகியவற்றை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (29.07.2023) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி கலந்து கொண்டார்

---

### மணிப்பூர் கொடூரத்தை

# வெளியுலகிற்கு கொண்டு வந்தவர் பா.ஜ.க. அரசால் கைது!

இம்பால், ஜூலை 30 - மணிப்பூர் மாநிலத்தில், கடந்த மே 4 அன்று பழங்குடி பெண்கள் இருவரை, ஆயிரக்கணக்கான 'மெய்டெய்' இளைஞர்கள் சேர்ந்து, நிர்வாணமாக இழுத்துச் சென்றதுடன், அவர்களைக் கும்பல் வல்லுறவுக்கும் உள்ளாக்கிய கொடுமை நடந்தது. இந்தச் சம்பவம் மிகவும் தாமதமாக கடந்த ஜூலை 19 அன்று தான் வெளியுலகிற்குத் தெரியவந்தது. சமூக வலைதளத்தில் வெளியான அந்த வீடியோவைக் கண்டு உலகமே அதிர்ந்தது. மனித சமூகமாக பிறந்த ஒவ்வொருவரையும் வெட்கித் தலை குனிய வைத்தது.

ஜூலை 19 அன்று வெளியான வீடியோவால் துணிச்சல் பெற்றவர்கள், இது போன்ற அரங்கேறிய வேறு பல கொடூரங்கள் தொடர்பான வீடியோக்கள், புகைப்பட ஆதாரங்களையும் வெளியிட ஆரம்பித்தனர்.

இதனால், மணிப்பூரில் குக்கி பழங்குடி பெண்கள் அனுபவிக்கும் துயரங்கள், ஒவ்வொன்றாக வெளியுலகிற்குத் தெரிய ஆரம்பித்தன. இவை ஒன்றிய மாநில பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியாக மாறின. இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி பதிலளிக்கக்கோரி, எதிர்க்கட்சிகள் நடத்தி வரும் போராட்டங்களால் நாடாளுமன்றம் கடந்த 7 நாட்களாக முடங்கிக் கிடக்கிறது.

**சி.பி.ஐ. விசாரணை**

இதனிடையே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்காத மோடி அரசு, மணிப்பூர் உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர்களைத் தேடிப் பழிவாங்கும் திட்டத்தைக் கையில் எடுத்தது.

குறிப்பாக, பழங்குடி பெண்கள் கும்பல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட கொடூரத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த வீடியோ விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. மணிப்பூர் வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றவும், இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யவும் ஒன்றிய அரசு முடிவெடுத்திருப்பதாக கூறப்படுகிறது. மணிப்பூர் வன்முறையோடு தொடர்புடைய 5க்கும் மேற்பட்ட வழக்குகள் ஏற்கெனவே சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், வீடியோ விவகாரமும் சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. மேலும், இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணையை, அண்டை மாநிலமான அசாமில் நடத்துவதற்கும் அனுமதி கேட்டு, ஒன்றிய அரசு, உச்சநீதிமன்றத்தை நாட உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில்தான், குக்கி பழங்குடி பெண்கள் மீதான கும்பல் வல்லுறவுக் கொடுமையை இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்த வீடியோவை எடுத்தவரை, மோடி அரசு கைது செய்துள் ளது. அவர் இந்த வீடியோவை எடுப்பதற்குப் பயன்படுத்திய மொபைல் போனையும் பறிமுதல் செய்துள்ளது

**ஆகஸ்டில் பேரவை சிறப்புக் கூட்டம் : மணிப்பூர் பா.ஜ.க. அரசு முடிவு!**

மணிப்பூர் சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம், ஆகஸ்ட் மாதத்தில் கூட்டப்பட உள்ளதாக மாநில பா.ஜ.க. அரசு அறிவித்துள்ளது. "மணிப்பூரின் தற்போதைய சூழல் குறித்து விவாதிக்க, பேரவையின் சிறப்புக் கூட்டத்தை கூட்டுமாறு பல்வேறு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்தன. இதைத் தொடர்ந்து, ஆகஸ்ட் மாதத்தில் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட மாநில அரசு முடிவெடுத்துள்ளது" என மாநில அமைச்சர் சபம் ராஜன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த மே மாதம் நடைபெற்ற வன்முறையின்போது, பா.ஜ.க. எம்.எல்.ஏ. விவுங்ஸகின் வால்டே படுகாயமடைந்தார். அவரது மருத்துவ கவனிப்புக்கான செலவை மாநில அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இது குறித்து அமைச்சரிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப் பினர்.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த அமைச்சர் ராஜன், எம்.எல்.ஏ.வின் உடல் நிலை குறித்து மாநில அரசு கவனத்தில் கொண்டதாகவும், மாநில அமைச்சர்கள் அவரை நேரில் சென்று நலம் விசாரித்ததாகவும் சமாளித்தார்.

**'புரட்சியின் குரல்': குக்கி பழங்குடியினரின் புதிய செய்தித்தாள்!**

மணிப்பூரில் இணைய சேவை இன்னும் முழுமையாக சீரடையாததால் தகவல் பரிமாற்றத்திற்காக குக்கி பழங்குடியினத் தன்னார்வலர்கள் 'ஜலேன் அவ்கின்' (*Zalen Awgin*) என்ற பெயரில் செய்தித்தாள் துவங்கியுள்ளனர். 'ஜலேன் அவ்கின்' என்ற சொல்லுக்கு 'புரட்சியின் குரல்' (*The Voice of the Revolution*) என்பது அர்த்தமாகும். குக்கி பழங்குடியினத்தைச் சேர்ந்த தன்னார்வலர்கள் தாமாக முன்வந்து இதனைத் தொடங்கி செயல்படுத்தி வருகின்றனர். அனைத்து கிராமங்களுக்கும் இந்த செய்தித்தாள் சென்றடையும் வகையில் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

---

### கோவை - சூலூரில் புலவர் செந்தலை ந.கவுதமன் தலைமையில்

# கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்துப் பேரரங்கம்!

## தொல். திருமாவளவன் - சசிகாந்த் செந்தில் பங்கேற்பு!

கோவை, ஜூலை 30 - கோவை - சூலூரில் 36 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் கலை, இலக்கிய, பொது நல அமைப்பான சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் இன்று (30.7.2023 - ஞாயிறு மாலை 5 மணிக்குச் சூலூர் அறிஞர் அண்ணா சீரணி அரங்கில் நிகழவுள்ளது.

"கலைஞர் கண்ட பெரியார்" எனும் தலைப்பில் தொல். திருமாவளவனும், 'கலைஞர் கண்ட வள்ளுவர்' எனும் தலைப்பில் சசிகாந்த் செந்திலும் 'கலைஞர் கண்ட அம்பேத்கர்' எனும் தலைப்பில் கொளத்தூர் மணியும், 'கலைஞர் கண்ட வள்ளலார்' எனும் தலைப்பில் கோவை மு.இராமகிருஷ்ணனும், சொற்பொழிவாற்ற உள்ளனர்.

புலவர் செந்தலை ந.கவுதமன் தலைமையில் நிகழும் இவ்விழாவில் கலைஞர் அவர்களின் படத்தைத் கோவை (தெற்கு) மாவட்ட தி.மு. கழகச் செயலாளர் தளபதி முருகேசன் திறந்து வைக்க உள்ளார்.

தூய தமிழ்ப் பெயர் தாங்கிய குழந்தைகளும், சாதி மறுப்பு மத மறுப்பு மணம் புரிந்த மணமக்களும், தமிழில் பெயர்ப் பலகை வைத்துள்ள வணிக நிறுவனங்களும் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பாராட்டிச் சிறப்பிக்கப்பட உள்ளனர்.

தெ. சிவசங்கர் வரவேற்புரையும், சூ.செ.குமரவேல் நன்றியுரையும் வழங்க உள்ளனர்.

---

### புதுபாளையம் பகுதிச் செயலாளர்

# ஜி.பி.வெங்கடேசன் தந்தை ஜி.பாஸ்கரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

கடலூர், ஜூலை 30- கடலூர் மாநகரம் புதுபாளையம் பகுதி செயலாளர் ஜி.பி.வெங்கடேஷ் தந்தையும், கடலூர் மாவட்ட தி.மு.க முன்னாள் மாவட்டக் கழக பொருளாளர், முன்னாள் பொதுக் குழு உறுப்பினர், முன்னாள் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், கடலூர் மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி புறவலர், கடலூர் மாவட்ட அறங்காவலர் குழு தலைவருமான ஜி.பாஸ்கரன் அவர்கள் (வயது 83) உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நேற்று முன்தினம் (28.07.2023) வெள்ளிக்கிழமை மாலை 06.30 மணியளவில் இயற்கை எய்தினார் அவர்களின் இறுதி ஊர்வலமும், நல்லடக்கமும் நேற்று (29.07.2023) சனிக்கிழமை மாலை 04.00 மணியளவில் தீர்த்தனகிரி குறிஞ்சிப்பாடி ஒன்றியம் கடலூர் மாவட்டம் எனும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாருக்கு திருமதி. ரேவதி பாஸ்கரன் எனும் மனைவியும், புது பாளையம் பகுதி செயலாளர் பி. வெங்கடேஷ் எனும் மகனும் திருமதி. ஆர்.டி. தேவி சுப்புராஜ், திருமதி. ஆர்.டி.கோமதி துரைராஜ் ஆகிய மகள்களும் உள்ளனர்.

---

### பிரதமர் நரேந்திர மோடியின் வாய்ப்பந்தல்:

# விவசாயிகளுக்காக பாடுபட்டதுபோல பீற்றிக்கொள்கிறார் பிரதமர்!

## 'தீக்கதிர்' நாளேடு அடுக்கடுக்கான கேள்வி!

சென்னை, ஜூலை 30- பிரதமர் நரேந்திர மோடி வாய்ப்பந்தல் போடுகிறார் எனவும் விவசாயிகளுக்காக பாடுபட்டதுபோல பீற்றிக் கொள்கிறார் எனவும் பிரதமரின் சொல்லுக்கும் செயலுக்கும் சம்மந்தமில்லை என்று தனது கண்டனத்தை 'தீக்கதிர்' நாளேடு தனது 29.7.2023 தேதியிட்ட தலையங்கத்தில் அடுக்கடுக்கான கேள்விகளை கேட்டு பதிவு செய்துள்ளது.



தீக்கதிர்

2023 ஜூலை 29 சனிக்கிழமை

**சொல்வது வேறு; செய்தது வேறு**

கடந்த ஒன்பதாண்டுகளாக விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுத்துள்ளோம் என்று பிரதமர் நரேந்திர மோடி வாய்ப்பந்தல் போட்டுள்ளார். ராஜஸ்தான் மாநிலம் கிசாரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், விதைகள் முதல் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் வரை அனைத்து வசதிகளும் விவசாயிகளுக்கு செய்து தரப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

அது வருமாறு:-

கடந்த ஒன்பதாண்டுகளாக விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுத்துள்ளோம் என்று பிரதமர் நரேந்திர மோடி வாய்ப்பந்தல் போட்டுள்ளார். ராஜஸ்தான் மாநிலம் கிசாரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், விதைகள் முதல் விளை பொருட்களை சந்தைப்படுத்துதல் வரை அனைத்து வசதிகளும் விவசாயிகளுக்கு செய்து தரப்பட்டுள்ள தாக கூறியுள்ளார்.

இந்திய விவசாயத்தை கார்ப்பரேட்டுகளிடம் கைமாற்றி விடும் வகையில் மோடி அரசினால் கொண்டு வரப்பட்ட மூன்று வேளாண் சட்ட திருத்தங்கள் யாருடைய நலனை கருத்தில் கொண்டு எடுத்த முடிவு என்று பிரதமர் மோடி விளக்குவாரா? விவசாயத் துறையை விவசாயி களிடமிருந்து பறிக்கும் இந்த கொடூரச் சட்டத் திருத்தங்களை எதிர்த்து இந்திய விவசாயிகள் ஒரு ஆண்டுக்கு மேல் போராடினார்கள். கடும் அடுக்குமுறை மூலம் இந்த போராட்டத்தை ஒடுக்கி விட ஒன்றிய அரசு முயன்றது.

விவசாயிகளின் வீரம்செறிந்த போராட்டத்தின் விளைவாகவே இந்த சட்டத்திருத்தங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதை மறைத்து விவசாயிகளுக்காக பாடுபட்டது போல பிரதமர் பேசுவதை யாரும் நம்ப மாட்டார்கள்.

2014ஆம் ஆண்டு தேர்தலின் போது, ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் விளைபொருளுக்கு உற்பத்திச் செலவை விட ஒன்றரை மடங்கு கூடுதலாக விலை தருவோம் என்று மோடி வாக்குறுதி அளித்தார். கடந்த ஒன்பதாண்டுகளில் ஒரு முறையாவது, எந்த பயிருக்காவது இதை நடைமுறைப்படுத்தியதா மோடி அரசு?

தமிழகம் உட்பட பல்வேறு மாநிலங்களில் விவசாயத்திற்கு கிடைக்கும் இலவச மின்சாரத்தை ரத்து செய்யும் வகையில் மின்சார சட்ட திருத்த மசோதா கொண்டு வரத்துடிப்பது விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்ட முடிவா?

மாநிலங்களுக்கு அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்களை வழங்க ஒன்றிய அரசு மறுக்கிறது. இதனால் வெளிச்சந்தையில் அரிசி விலை கடுமையாக உயர்ந்து கர்நாடகம் போன்ற மாநிலங்கள் அரிசிக்குப் பதிலாக பணமாக வழங்குகின்றன. அரிசி விலை உயர்ந்தபோதும், நெல்லுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ள போதும் விவசாயிகளுக்கு லாபமில்லை.

உரம், பூச்சிமருந்து போன்றவற்றின் விலையும் தொடர்ந்து உயர்ந்தே வந்துள்ளது. விவசாய இடுபொருட்களுக்கு தட்டுப்பாடும் நிலவுகிறது. நகர்ப்புற பொருளாதாரத்திற்கு நிகராக கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தியுள்ளதாகவும் பிரதமர் ஜம்பமடிக்கிறார். ஆனால் இவருடைய ஆட்சியில் நகர, கிராமப் பொருளாதாரம் இரண்டும் வீழ்ந்துள்ளது என்பதே உண்மை. நூறு நாள் வேலைத்திட்டத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு தொடர்ந்து வெட்டப்படுகிறது. பிறகு எப்படி கிராமப்புற பொருளாதாரம் உயரும்?

இவ்வாறு 'தீக்கதிர்' நாளேடு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

---

## குரு - சிஷ்யன்



**சிஷ்யன்:**- 'என்மண் - என்மக்கள்' என்றால் என்ன குருவே?

**குரு:** - ஓ! நீ கால், அரைக்கால் வேக்காடு நடைபயணம் பற்றி கேட்கிறியா?

என், எனது என்றாலே தனித்துவம்.

"நாம்", "நமது" என்று உச்சரிக்கும் போதுதான் உதடுகள் ஒட்டும். எனவேதான் கூட்டணிக் கட்சிகளான அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க. போன்ற கட்சிகள் எவையும் ஒட்டவில்லைபோலும்!

**திருமதி பி.விஜயலட்சுமி**